**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 07.07.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

முக்கிய கனிமங்கள் மற்றும் தொழில்நுட்பங்களின் வினியோகத்தில், உலக நாடுகளுக்கு இடையே, கூடுதல் ஒத்துழைப்பு தேவை என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

இந்தியாவின் **பாதுகாப்பு உற்பத்தித் துறை**, அநேகமாக சுயசார்பை எட்டி விட்டதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

வரவிருக்கும் **மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்** போது, மக்கள், தங்களை பற்றிய விவரங்களைத் தாங்களே பதிவு செய்ய, **சிறப்பு பிரத்யேக இணைய தளம்** அமலாக உள்ளது.

புதுச்சேரியில் நேரடித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட, 49 தீயணைப்பு வீரர்கள், மற்றும், 10 **தீயணைப்பு வாகன ஓட்டுநர்களுக்கு**, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று நியமன ஆணைகளை வழங்கினார்.

------------------------

*மோடி-கனிமவளம் 1 (9)*

எந்தவொரு நாடும், முக்கியக் கனிமங்கள், தொழில்நுட்பங்கள், மற்றும் பொருள் வினியோகத் தொடர்களை, **ஆயுத மயமாக்கக்** கூடாது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். எகிப்து நாட்டின் **ரியோ-டி-ஜெனிரோ** நகரில், **பிரிக்ஸ்** உச்சி மாநாட்டின் **புறவீச்சு அமர்வு**

ஒன்றில் உரையாற்றிய அவர், முக்கிய கனிமங்கள் மற்றும் தொழில்நுட்பங்களில், உலக நாடுகளுக்கு இடையே, கூடுதல் ஒத்துழைப்பு தேவை என்றும், இதுதொடர்பான பொது வினியோக சங்கிலியில், **நெகிழ்வுத் தன்மையை** மேம்படுத்த வேண்டியது, அவசியம் என்றும் கூறினார். பிரதமரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்….

**(வாய்ஸ்)**

*மோடி-கனிமவளம் 2 (12)*

**(வாய்ஸ்)**

நடப்பு 21ஆம் நூற்றாண்டில், உலக மக்களின் முன்னேற்றமும், நலவாழ்வும், **செயற்கை நுண்ணறிவு** போன்ற தொழில்நுட்பங்களை, மிகவும் சார்ந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவு மூலம், மக்களின் அன்றாட வாழ்க்கையை பெரிதும் மேம்படுத்த முடியும் என்றாலும், இதில், பாகுபாடு, **நன்னெறி முரண்பாடு** போன்ற பல அபாயங்களும் இருப்பதை கருத்தில் கொண்டே, **மானுட நன்மைக்கான** A I என்னும் கொள்கையை இந்தியா பின்பற்றி வருவதாக அவர் கூறினார். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களின் நிர்வாகத்தில், புதுமைப் படைப்புகளை ஊக்குவிக்கும் அதே வேளை, பல்வேறு தரப்பினரின் கவலைகளுக்கும் சம அளவில் இடமளித்து, பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்பதே, இந்தியாவின் நிலைப்பாடு என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

--------------------

*பாதுகாப்பு* (13)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தித் துறை, அநேகமாக சுயசார்பை எட்டி விட்டதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பாதுகாப்புத் துறை கணக்கியல் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் மாநாட்டில் உரையாற்றிய அவர், முன்பு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்கள், தற்போது உள்நாட்டிலேயே தயாரிக்கப் படுவதாகவும், உள்நாட்டு ஆயுதங்களின் வல்லமை, அண்மையில் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது வெளிப்பட்டதை தொடர்ந்து, தற்போது உலக அளவில், இத்தகைய ஆயுதங்களின் தேவை அதிகரித்து இருப்பதாகவும் கூறினார். அமெரிக்கா, ஐரோப்பா உட்பட உலகெங்கிலும், பல்வேறு நாடுகளின் ராணுவ செலவுகள் அதிகரித்து வரும் நிலையில், **பாதுகாப்புப் பொருளியல்** துறையினரின் முக்கியத்துவம் மேலும் வலுவடைந்து வருவதாக அவர் கூறினார்.

---------------------

*நட்டா* (16)

அனைத்து மக்களுக்கும், ஒரே சீரான, தரமான, மருத்துவ வசதிகளை, எளிதில் அணுகத் தகுந்த விதத்தில், குறைந்த கட்டணத்தில் வழங்கும் இலக்கை, நாடு, விரைந்து எட்டி வருவதாக, மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜே.பி நட்டா கூறியுள்ளார். தற்போது நாடு முழுவதும், 1 லட்சத்து 77 ஆயிரத்திற்கும் மேற்பட்ட **ஆயுஷ்மான் ஆரோக்கிய**

மந்திர்கள், மக்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளை, அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே வழங்குவதாகவும், இ-சஞ்சீவனி, டெலி-மனஸ் போன்ற தொலை நிலை மருத்துவ ஆலோசனை வசதிகளால், சிறப்பு மருத்துவம் மக்களுக்கு கிடைப்பது, எளிதாகி இருப்பதாகவும், இன்று தேசிய நாளேடு ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையில் அமைச்சர் கூறியுள்ளார். இந்திர தனுஷ் இயக்கத்தின் கீழ், நாடு முழுவதும் 5.46 கோடி குழந்தைகள், மற்றும், 1.32 கோடி கருவுற்ற தாய்மார்களுக்கு, தடுப்பூசி போடப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் மகப்பேற்றுக் கால மரணங்களின் எண்ணிக்கை, 86 சதவிகிதம் குறைந்து இருப்பதாக ஐ.நா அறிக்கையின் மூலம் தெரிய வந்துள்ளதாகவும், இது, உலக சராசரியை விட, 2 மடங்கு முன்னேற்றம் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

---------------------

எல். முருகன் (18)

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், ஆரோக்கிய இந்தியா-வளமான இந்தியா இயக்கத்தின் கீழ், இன்று சென்னையில், இஎஸ்ஐ பயனாளிகளுக்கான மருத்துவ பரிசோதனை முகாமை தொடக்கி வைத்தார். நாட்டில் ஒவ்வொரு தனிநபரின் ஆரோக்கியமும், மிக முக்கியம் என்று அவர் கூறினார். உணவில் கொழுப்பின் அளவை குறைத்து, உடல் பருமன் பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தையும், யோகா மூலம், ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு மாற வேண்டியதன்

அவசியத்தையும், பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒரு இஎஸ்ஐ மருத்துவக் கல்லூரியை தொடக்கும் இலக்குடன், அரசு செயல்பட்டு வருவதாகவும், அடுத்த 5 ஆண்டுகளில், கூடுதலாக 75 ஆயிரம் மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்களை உருவாக்க, நடவடிக்கை எடுக்கப் படுவதாகவும், அமைச்சர் தெரிவித்தார். நாட்டில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மருந்தகங்களில், குறைந்த விலையில் மருந்துகள் மக்களக்கு விற்கப் படுவதாகவும், பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினருக்கு, 5 லட்சம் ரூபாய் வரை மருத்துவ காப்பீடு வழங்கும் திட்டத்தை, அரசு அமல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

---------------------

*கணக்கெடுப்பு 1 (7)*

வரவிருக்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது, மக்கள், தங்களை பற்றிய விவரங்களை தாங்களே பதிவு செய்ய ஏதுவாக, **சிறப்பு பிரத்யேக இணைய தளம்** ஒன்றை, அரசு செயல்படுத்த உள்ளது. 2027ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் 2 கட்டங்களிலும், இந்த வசதி கிடைக்கும் என, இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர், மற்றும் தலைமைப் பதிவாளர், சமூக ஊடகப் பதிவுகளில் தெரிவித்துள்ளார். தலைமைப் பதிவாளரின் சமூக ஊடகப் பதிவுகள் குறித்து கூடுதல் தகவல்கள்....

**(வாய்ஸ்)**

*கணக்கெடுப்பு 2 (12)*

(வாய்ஸ்)

நாட்டில், முதல்முறையாக இம்முறை, மக்கள் தொகை கணக்கெடுப்பு, டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளப்படும் என்றும், ஆங்கிலம், இந்தி, மற்றும், பிராந்திய மொழிகளில் மக்கள் தொகை விவரங்களை சேகரிக்க, மொபைல் செயலிகள் பயன்படுத்தப்படும் என்றும், தலைமைப் பதிவாளர் தெரிவித்துள்ளார். 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான அரசிதழ் அறிவிக்கையை, மத்திய அரசு கடந்த மாதம் வெளியிட்டு, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அரசிதழ்களில், இதை மறு வெளியீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. இம்முறை 2 கட்டங்களாக மேற்கொள்ளப்பட உள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பில், வீடுகளை பட்டியலிடுவதற்கான முதல்கட்டப் பணிகள், அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்க இருப்பதும், 2ஆம் கட்டத்தில், மக்கள் தொகை விவரங்கள் சேகரிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------

சுரங்கம் (12)

சுரங்கத் துறையில் முன்னேற்றம், மக்கள் நலன், மற்றும், சுற்றுச் சூழல் பாதுகாப்பை மேம்படுத்த, மத்திய அரசு பல்வேறு முக்கிய சீர்திருத்தங்களை அமல்படுத்தி வருவதாக, மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார். 5 நட்சத்திர, மற்றும் 7 நட்சத்திர அந்தஸ்து பெற்ற சுரங்கங்களை பாராட்டும் வகையில்,

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் இன்று நடைபெற்ற விழாவில் அவர் உரையாற்றினார். சுரங்கப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் மட்டுமின்றி, சுரங்கங்களை சுற்றி உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலன்களும் பாதுகாக்கப் படுவதை அரசு உறுதிப்படுத்தி இருப்பதாக அவர் தெரிவித்தார். வளங்குன்றா அடிப்படையில் சுரங்கப் பணிகள் மேற்கொள்ளப் படுவதை உறுதிப்படுத்துவதில், தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை அரசு ஊக்குவித்து வருவதாக, அமைச்சர் மேலும் கூறினார்.

---------------------

*புதுச்சேரி தீயணைப்பு* (12)

புதுச்சேரியில் நேரடித் தேர்வு மூலம் தீயணைப்புத் துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 49 தீயணைப்பு வீரர்கள், மற்றும், 10 தீயணைப்பு வாகன ஓட்டுநர்களுக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று நியமன ஆணைகளை வழங்கினார். நியமன உத்தரவு வழங்கப்பெற்ற 49 தீயணைப்பு வீரர்களில், 17 பெண்களும் அடங்குவர். தீயணைப்புத் துறையில், 10, 15, மற்றும் 25 ஆண்டுகளாக பதவி உயர்வு இன்றிப் பணிபுரிந்து வரும் தீயணைப்பு வீரர்களுக்கு, சிறப்பு நிலை சீருடை அந்தஸ்து வழங்குவதற்கான ஆணைகளையும், இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர்.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு. சாய் சரவணன்

குமார், தீயணைப்புத் துறைச் செயலர் டாக்டர் முத்தம்மா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

---------------------

*புதுச்சேரி இந்திரா நகர் (7)*

புதுச்சேரியில் இந்திரா நகர் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில், 8 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பில், பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி ஆறுமுகம் ஆகியோர் இன்று பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தனர். பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் திரு. வீர செல்வம் உள்ளிட்ட அதிகாரிகள், மற்றும், உள்ளூர் பிரமுகர்கள் இதில் கலந்து கொண்டனர்.

---------------------

*புதுச்சேரி கும்பாபிஷேகம் (7)*

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், இன்று பிள்ளைச்சாவடி மீனவர் கிராமத்தில் உள்ள, கங்கையம்மன் கோவில் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு, புனித நீர் ஊற்றி வழிபாடு செய்தார். முன்தாக பூரணக் கும்ப மரியாதையுடன் துணை நிலை ஆளுநருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் திரு. கல்யாண சுந்தரம், மீனவர் கிராம பஞ்சாயத்தார், மற்றும், கோவில் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

---------------------

வானிலை (10)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 13ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 9ஆம் தேதி வரை அநேக இடங்களில், அதிகபட்ச வெப்பநிலை, இயல்பை விட, 2 முதல், 4 டிகிரி செல்சியஸ் அதிகமாக பதிவாகலாம் என்றும், வெப்பநிலையும், ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் பட்சத்தில், ஓரிரு பகுதிகளில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் நடுவட்டத்தில், 6 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---------------------

*அமர்நாத் யாத்திரை (13)*

ஜம்மு-காஷ்மீரில், 38 நாள் அமர்நாத் யாத்திரையின் 5ஆம் நாளான இன்று அதிகாலை, ஜம்முவில் உள்ள பகவதி நகர் முகாமில் இருந்து, மொத்தம் 8 ஆயிரத்து 600 யாத்திரிகர்கள், மொத்தம் 373 வாகனங்களில், 2 குழுக்களாக, தெற்கு காஷ்மீரில் உள்ள பகல்காம், மற்றும், மத்திய காஷ்மீரில் உள்ள, பல்டால் அடிவார முகாம்களுக்கு புறப்பட்டு சென்றுள்ளனர். இவ்விரு முகாம்களில் இருந்து, 2 மலைப் பாதைகளில் ஏற்கனவே புறப்பட்டு சென்றவர்களில், இன்று நண்பகல் வரை, 13 ஆயிரத்து 300 பேர், அமர்நாத் குகைக் கோவிலில் தரிசனம் செய்து

இருப்பதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. புகழ்பெற்ற அமர்நாத் குகைக் கோவில், தெற்கு காஷ்மீரின் இமயமலைப் பகுதியில், 12 ஆயிரத்து 756 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இவ்வாண்டு அமர்நாத் யாத்திரைக்கான பாதுகாப்பு, மற்றும், இதர ஏற்பாடுகள் விரிவான முறையில் செய்யப் பட்டுள்ளது குறித்து பயணிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

---------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

முக்கிய கனிமங்கள் மற்றும் தொழில்நுட்பங்களின் வினியோகத்தில், உலக நாடுகளுக்கு இடையே, கூடுதல் ஒத்துழைப்பு தேவை என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

இந்தியாவின் **பாதுகாப்பு உற்பத்தித் துறை**, அநேகமாக சுயசார்பை எட்டி விட்டதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

வரவிருக்கும் **மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்** போது, மக்கள், தங்களை பற்றிய விவரங்களைத் தாங்களே பதிவு செய்ய, **சிறப்பு பிரத்யேக இணைய தளம்** அமலாக உள்ளது.

புதுச்சேரியில் நேரடித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட, 49 தீயணைப்பு வீரர்கள், மற்றும், 10 **தீயணைப்பு வாகன ஓட்டுநர்களுக்கு**, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று நியமன ஆணைகளை வழங்கினார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.**